ConnectABILITY
A project of Community Living Toronto

## நல்வழிப்படுத்தல்

1. உங்கள் குழந்தையை அழைக்கும்போது குழந்தையின் பெயரை பயன்படுத்துங்கள்

2. குழந்தையின் கண்பார்வை அளவுக்குத் தாழ்ந்து அவரைத்தொட்டு அவரது கவனத்தைக் கவரவும். அவ்வாறே உங்கள் அன்பையும், உங்களுக்கு அவரது உணர்வுகளில் உள்ள கரிசனையையும் புலப்படுத்துங்கள்.

3. உங்கள் குழந்தையில் உள்ள சிறப்புத்தன்மையை அறிந்து அதை நாள்தோறும் கூறுங்கள்

4. உங்கள் குழந்தை உங்களை நாடும்வேளையில் குழந்தையைப் பார்க்கவும். குழந்தை சொல்வதைக் கேட்கவும்.

5. உங்கள் குழந்தையின் நடைமுறைக்கேற்ப ஒரு தொடர்பு கொள்முறையை அறிமுகப்படுத்தவும் (எ.கா) சைகை, ஒலி, சொல் அல்லது படம்

6. முடிந்தவரை உங்கள் குழந்தையை மாறுபட்ட பல செயற்பாடுகளில் ஈடுபடக்கூடிய வாய்ப்பைக் கொடுங்கள். தன்னம்பிக்கையையும் பொறுப்பையும் அதிகரிக்கும் செயற்பாடுகளில் குழந்தைக்கு வாய்ப்பு அளியுங்கள்.

7. குழந்தையின் வளர்ச்சிக்குட்பட்ட எதிர்பார்ப்பைக் கொள்ளுங்கள். நிதானமான, தெளிவான வழிகாட்டலைத்தொடருங்கள்.

8. உங்கள் பிள்ளையின் கடப்புக்காலங்களை முற்கூட்டியே உணர்ந்து தயார்படுத்துவதன்மூலம் எழக்கூடிய சிக்கல்களைத் தவிருங்கள்

9. முடிந்த வேளைகளில் பிள்ளையின் பொருத்தமற்ற நடைமுறையை அலட்சியம் செய்யுங்கள்

10. முடிந்த வேளைகளில் பிள்ளையை, மிகவும் பொருத்தமான செயலில் ஈடுபடச் செய்யுங்கள். (எ.கா) உங்கள் பிள்ளை கட்டடத்துண்டுகளை எறிந்து கொண்டிருந்தால் ஒரு கோபுரம் கட்டுவதில் கவனத்தைத் திருப்புங்கள்.

11. உங்கள் பிள்ளை நடந்து கொள்ளவேண்டிய விதம், விளையாட்டு, இவற்றுக்கு நீங்கள் முன்மாதிரியாக இருந்து செயற்படுத்துங்கள்.

12. நீங்கள் பிள்ளையின் செயலால் குழப்பமடையும்போது அச்செயலைக் குழந்தை நிறுத்தச்செய்வதோடு நின்றுவிடாமல் நீங்கள் விரும்பும் செயலையும் குழந்தைக்கு உணர்த்துங்கள் (எ.கா) சமையலறையில் வந்து விளையாடவேண்டாம். வெளியில் விளையாடுங்கள்.

13. நியாயபூர்வமான விளைவுகளை உணர்த்துங்கள். இதனால் பிள்ளை தனது செயற்பாட்டின் விளைவை உணரவைக்க முடியும். (எ.கா) பிள்ளை விளையாட்டுப்பொருட்களை எறிந்தால் அவற்றை அவ்விடத்திலிருந்து சிறிதுநேரம் எடுத்துவிடுங்கள்.

14. நடைமுறை எதிர்பார்ப்புகளில், அன்பையும் பாசத்தையும் தொடர்புபடுத்துவதைத் தவிருங்கள்.

15. எப்போதும் உங்கள் பிள்ளையின் வெற்றியைப்பாராட்டுங்கள்.